திருச்சி 2-10-2015 ★★★★ தினத்தந்தி



# தனியார் அமைப்பு மீது வழக்குப்பதிவு

திருச்சி கீழ்கல்கண்டோர் கோட்டை அண்ணா நகர் பகுதியை சேர்ந்தவர் ராமகிருஷ்ணன் (வயது 29). இவர் நேற்று காந்தி மார்க்கெட் போலீஸ் நிலையத்தில் ஒரு புகார் மனு கொடுத்தார். அந்த மனுவில், ஒரு தனியார் பிராணிகள் நல அமைப்பின் மருத்துவர்கள் மற்றும் ஊழியர்கள் திருச்சி- மதுரை ரோடு மாநகராட்சி வாகனம் நிறுத்தும் இடத்தில் ஒரு நாய்க்கு கருத்தடை சிகிச்சை செய்தனர். இதில் தவறான கவனக்குறைவான சிகிச்சையால் அந்த நாய் இறந்து விட்டது. எனவே அந்த தனியார் அமைப்பு மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், என்று கூறியிருந்தார். அதன்பேரில் அந்த தனியார் அமைப்பு மீது காந்தி மார்க்கெட் போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.